முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

## மட்டம் III பரீட்சை – 2023 யூலை

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(Financial Controls & Audit)

2023-08-19
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** வாசிப்புக்கு : 15 *நிமிடங்கள்*
*விடையெழுத* : 03 *மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

***டிரஸ்ட் பீ.எல்.சீ.*** என்பது பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனியாகும். இக்கம்பனி ஏழு (07) ஆண்டுகளுக்கு முன்னர் தற்போதைய கணக்காய்வாளரை தனது கம்பனியின் கணக்காய்வாளராக நியமித்திருந்தது. அவர் ஒரு தனியான பயிற்சியாளராக உள்ளார். இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையானது (SLAASMB) கணக்கீட்டு நியமங்களுடன் குறிப்பிடத்தக்க பத்து (10) இணக்கமின்மைகளைப் பட்டியலிட்டு கம்பனிக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தது. இதனால், பணிப்பாளர் சபையானது (BOD) அந்தக் கணக்காய்வாளரை மீண்டும் நியமிப்பது பற்றிய கணக்காய்வுக் குழுவின் (AC) பரிந்துரையைக் கோரியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ***டிரஸ்ட் பீ.எல்.சீ.*** இன் கணக்காய்வுக் குழுவினது மூன்று (03) தொழிற்பாடுகளைக் (functions) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) கம்பனியின் வெளிவாரியான கணக்காய்வாளர் தொடர்பில் ***டிரஸ்ட் பீ.எல்.சீ.*** இன் BOD இற்கு கணக்காய்வுக் குழு வழங்கக்கூடிய இரண்டு (02) நன்மைகளை **அடையாளங் காண்க.**

(02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட கிளேன்ரொக் (தனியார்) கம்பனி (கிளேன்ரொக்)** 45 அதிசொகுசு அறைகளைக் கொண்ட ஹோட்டல் ஒன்றை நடத்திச் செல்கிறது. **கிளேன்ரொக்** இன் முகாமைத்துவப் பணிப்பாளர் கீழ்வரும் இடர்கள் தொடர்பில் சில கரிசினைகளைக் கொண்டிருக்கிறார்:

(1) வங்கியில் வைப்புச் செய்வதற்காக குறிப்பிடத்தக்களவு பணத்தை எடுத்துச் செல்வது.

(2) தனியான ஓர் இடத்தில் அமைந்துள்ள உணவகத்தில் தொடர்ந்து நட்டங்கள் ஏற்படுவது.

(3) ஹோட்டல் தொழில்துறை தற்போது இலங்கையில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய துறையாக இருப்பது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேலே இனங்காணப்பட்ட இடர்களைத் தணிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய ஒவ்வொரு நுட்பங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட சென்யான் பொறியியல் (தனியார்) கம்பனி** 2020 ஆம் ஆண்டு தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. ஆனால் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக, கணக்காளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. இதன் விளைவாக **சென்யான் கம்பனியின்** வருடாந்தக் கணக்குகளைத் தயாரிப்பது தாமதமடைந்தது. தற்போது வருடாந்தக் கணக்குகள் தயாராக இருப்பதுடன் **சென்யான் கம்பனியின்** முகாமைத்துவப் பணிப்பாளர் 2020/21 மற்றும் 2021/22 ஆகிய நிதி ஆண்டுகளுக்கான வருடாந்தக் கணக்காய்வை நடத்துவதற்கு உமது கணக்காய்வு நிறுவனத்தைக் கோரியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலொன்றை ஏற்றுக்கொண்டு, முகாமை செய்யும்போதான மூன்று (03) பிரதான அம்சங்களையும் தேவைப்பாடுகளையும் **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

நிறுவனமும் அதன் தனிநபர்களும் தொழில்சார் நியமங்களுடனும் பொருத்தமான சட்டம் மற்றும் ஒழுங்கு விதித் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கான நியாயமானளவு உத்தரவாதத்தை வழங்குவதற்கு தரக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றைத் தாபித்து, பராமரிப்பதே நிறுவனத்தின் நோக்கமாக இருக்கிறது. ஒரு நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டு முறைமையில் சில பிரதான கூறுகள் (key elements) காணப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

ஒரு நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டு முறைமையில் காணப்படும் இரண்டு (02) பிரதான கூறுகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட இன்ரெல் லங்கா (தனியார்) கம்பனியின் (இன்ரெல்)** 2023 மார்ச் 31 இல் உள்ள நிதி நிலைக் கூற்றின் பிரித்தெடுப்பு கீழே தரப்பட்டுள்ளது :

**2023 மார்ச் 31 இல்** *(ரூபா '000)*

| | |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் முன்கொணரற் பெறுமதியில் | 570 |
| தொக்குகள் | 2,850 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 420 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **3,840** |
| குறிப்பிடு மூலதனம் | 10 |
| கைக்கொள் இலாபம் | 3100 |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 730 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **3,840** |

ஈடுபடுத்தலின் கணக்காய்வு முகாமையாளராக இருக்கின்ற நீங்கள், **இன்ரெல்** இன் நிதி முகாமையாளருடனான கணக்காய்வு தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளீர்கள். இந்த முறை உங்களையும் உள்ளடக்கிய முற்றுமுழுதாக ஒரு புதிய அணி கணக்காய்வை நடத்தவுள்ளது. உங்களுடைய ஈடுபடுத்தல் பங்காளர், புதிய அணியுடனான ஈடுபடுத்தற் செயற்பாட்டின் தரம் மாறாமல் இருப்பது முக்கியமானது என வலியுறுத்தியுள்ளார்.

முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதிக ரீதியான இருப்புச் சரிபார்ப்பில் உங்களுடைய நிறுவனம் பங்கேற்றிருந்த போதிலும் இம்முறை **இன்ரெல்** கம்பனி, கணக்காய்வாளரை அழைத்திருக்க வில்லை. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொக்குகளின் பெறுமதி விதிவிதிக்கான வகையில் அதிகமாக இருப்பதை நீங்கள் அவதானித்துள்ளீர்கள். இருப்புகளை விற்பனை விலையில் மதிப்பீடு செய்ய பணிப்பாளர்கள் தீர்மானித்திருப்பதாக நிதி முகாமையாளர் உங்களிடம் தெரிவித்துள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தொக்குகளின் பௌதிக ரீதியான சரிபார்ப்பும் மதிப்பீட்டு முறையும் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **இன்ரெலின்** கணக்காய்வாளர் அறிக்கையை எவ்வாறு பாதிக்கும் என்பதை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(b) கணக்காய்வாளர் அபிப்பிராயத்தைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நான்கு (04) விடயங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(A) **Good Bank PLC** *(ஒரு வங்கி)* ஆனது **Rex & Filix (R & F)** என்ற கணக்காய்வு நிறுவனத்தை 2023/24 நிதியாண்டிற்கான தமது கணக்காய்வாளராக நியமிப்பதற்கு விரும்பியது. 2022/23 ஆம் நிதியாண்டிற்கான வங்கியின் நிதிக் கூற்றுக்கள், கணக்கீட்டு நியமங்களின் கோட்பாடுகளுக்கு ஏற்ப, கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான வலுவிழப்பு (impairment) ஏற்பாடுகள் இல்லாமை பற்றி கணக்காய்வாளர் அறிக்கையில் தகைமை (qualification) ஒன்றைக் கொண்டுள்ளது. **R & F** இன் ஒரு பங்காளர், ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக உள்ளபோதும் ஏனைய பங்காளர்கள், தகைமையைக் கவனத்திற் கொண்டு கணக்காய்வை ஏற்றுக்கொள்வது பொருத்தமானதாக இருக்குமா என சந்தேகிக்கின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

ஒரு புதிய சேவைநாடுநராக **Good Bank PLC** இன் கணக்காய்வை ஏற்றுக்கொள்வதற்கான சாத்தியத்தன்மை பற்றி **மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(B) **Centra PLC** *(ஒரு கம்பனி)* இன் கணக்காய்வுப் பங்காளர் கம்பனியின் பல நிறுவன நிகழ்வுகளில் காணப்பட்டுள்ளார். மேலும், கம்பனியின் CEO தனது மகளின் திருமண நிகழ்விற்கும் கணக்காய்வுப் பங்காளரை அழைத்திருந்தார். இந்த நிலைமை கணக்காய்வு நிறுவனத்தின் சிரேஷ்ட கணக்காய்வுப் பங்காளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. கணக்காய்வுப் பங்காளர், தான் அழைக்கப்பட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்வதைத் தவிர, தனக்கு அவர்களுடன் வேறு எந்த உறவோ அல்லது முரண்பாடோ இல்லை எனவும் அவர் **Centre PLC** இலிருந்து முற்றிலும் சுயாதீனமானவர் என்றும் வாதிடுகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

"சுயாதீனம் (independence)" என்னும் எண்ணக்கரு பற்றி கணக்காய்வுப் பங்காளருக்கு **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**RT ஹோட்டலின்** சமீபத்திய கொள்வனவுப் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:

| திகதி | GRN இல. | வழங்குநரின் பெயர் | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 2022.10.03 | 4765 | ராசி பழக் கடை | 52,760 |
| 2023.01.04 | 4766 | ரிஸான் இறைச்சிக் கடை | 105,460 |
| 2023.01.04 | 4767 | புதிய மரக்கறிகள் விற்பனை நிலையம் | 22,900 |
| 2023.02.06 | 4769 | குசும் வன்பொருள் அங்காடி | 17,800 |
| 2023.03.07 | 4770 | விஜயா விநியோகஸ்தர்கள் | 47,900 |

வழங்குநர்களால் வழங்கப்பட்ட கடன் காலம் 30 நாட்களாகும்.

2023 மே 10 இலான வியாபாரக் கடன்கொடுத்தோர் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:

*(ரூபா)*

| பெயர் | மொத்த நிலுவை | 0-30 நாட்கள் | 30-60 நாட்கள் | 60 நாட்களுக்கு மேல் |
|---|---|---|---|---|
| டில்னா டீ கடை | 22,700 | | | 22,700 |
| ராசி பழக் கடை | 52,760 | | | 52,760 |
| ரிஸான் இறைச்சிக் கடை | 154,620 | 142,320 | | 12,300 |
| புதிய மரக்கறிகள் விற்பனை நிலையம் | 22,900 | | 22,900 | |
| குசும் வன்பொருள் அங்காடி | 17,800 | 17,800 | | |
| **மொத்தம்** | **270,780** | **160,120** | **22,900** | **87,760** |

**RT ஹோட்டலின்** கணக்காய்வாளர் நீங்கள் எனவும் தற்போது நீங்கள் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வை மேற்கொள்கிறீர்கள் எனவும் கருதுக.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) நீங்கள் வெளிவாரியான உறுதிப்படுத்தல்களைப் பெற வேண்டிய இரண்டு (02) வழங்குநர்களை **இனங்காண்க.** அத்துடன் உங்களுடைய தெரிவுக்கான காரணங்களையும் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) வெளிவாரியான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதைத் தவிர, வியாபாரக் கடன்கொடுத்தோரின் கணக்காய்வில் ஆற்றப்பட வேண்டிய மூன்று (03) கணக்காய்வு நடைமுறைகளைப் **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(c) பின்தொடர் நிகழ்வுகள் (subsequent events) பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# வினா C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட டீ பெஷன் தனியார் கம்பனி** *(ஒரு கம்பனி),* மொத்த விற்பனை ஆடைத் தொழில் துறையில் முன்னணியிலுள்ள ஒரு கம்பனியாகும். இந்தக் கம்பனியின் பணிப்பாளரும் பிரதான பங்குதாரருமாகிய **திரு. தனுஷ்க** 12 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரேயொரு தையல்மெஷினுடன் இந்த வணிகத்தை ஆரம்பித்தார். அவருடைய ஆடைகளுக்கான தேவை அதிகரித்தபோது, அவர் தனது சொந்த இயந்திரங்கள் மற்றும் கட்டடங்களில் முதலீடு செய்யாது, வீட்டிலிருந்து ஆடைகளைத் தைப்பவர்களிடம் அவற்றை உப ஒப்பந்த அடிப்படையில் வழங்கியிருந்தார். தற்போது கம்பனியானது 50 இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட உப ஒப்பந்தகாரர்களைக் கொண்டிருக்கிறது. முன்னணியிலுள்ள சில்லறை ஆடை விற்பனையாளர்களுக்கு மாதாந்தம் 50,000 அலகிற்கும் மேற்பட்ட ஆடைகள் விற்பனை செய்யப்படு கின்றன.

வாடிக்கையாளர்களிடமிருந்து ஆடைகளுக்கான கட்டளைகள் (ஓடர்கள்) கிடைக்கப்பெறும்போது, ஆடைகளை வடிவமைக்கின்ற அணியானது வடிவமைப்புச் செயன்முறையை ஆரம்பிக்கிறது. வடிவமைப்புக்கான வாடிக்கையாளரின் அங்கீகாரத்துடன், அது உப ஒப்பந்தகாரரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அடுத்த படிமுறை ஆடையின் மாதிரியை அங்கீகரிப்பதாகும். அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பில் 2 மாதிரிகளை தயாரிக்குமாறு உப ஒப்பந்தகாரர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மாதிரி வடிவமைப்பானது கம்பனியால் அங்கீகரிக்கப்பட்டதும், உப ஒப்பந்தகாரர் வர்த்தக ரீதியான தயாரிப்பை ஆரம்பிக்க முடியும்.

வாடிக்கையாளர்களுக்கு ஒரு மாத கடன் காலம் வழங்கப்படுகிறது. எவ்வாறாயினும், 2023 மார்ச் 31 இல் நிலுவை மீதியாக ரூபா 14 மில்லியன் காணப்பட்டது. இது 6 மாதங்களுக்கும் மேலாக இருக்கின்ற நிலுவையாகும். உப ஒப்பந்தகாரர் கடன் காலப்பகுதியை வழங்குவதில்லை. கட்டளையின் பெறுமதி ரூபா 1 மில்லியனை விஞ்சுமாயின் உப ஒப்பந்தகாரர்களுக்கு முற்பணக் கொடுப்பனவுகளை வழங்க வேண்டும்.

நிதிக் குழுவில் ஐந்து (05) அங்கத்தவர்கள் உள்ளனர்; ஒரு கணக்காளர், 3 கணக்குப் பதியுநர்கள் மற்றும் ஒரு காசாளர் ஆகியோர்களே இவர்கள். தொக்குகளின் நகர்வுகளையும் நிதிப் பரிவர்த்தனைகளையும் பதிவு செய்வதற்கு உள்ளக ரீதியில் விருத்தி செய்யப்பட்ட மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. GRN அங்கீகரிக்கப்பட்டதும், கொடுப்பனவுகள் கணக்காளரால் உப ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், இரண்டு உப ஒப்பந்தகாரர்களின் கணக்குகளுக்கு செலுத்த வேண்டிய மீதிகள் காணப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் மாதிரியுடன் ஒத்துப்போகாததால் இருப்புகள் முழுவதையும் வாடிக்கையாளர்கள் நிராகரித்த சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. வாடிக்கையாளர்களால் சேகரிக்கப்படாத ரூபா 15 மில்லியனுக்கும் மேல் பெறுமதியான இருப்புகள் களஞ்சியத்தில் தேங்கியுள்ளன.

**திரு. தனுஷ்க,** உள்ளகக் கணக்காய்வை நடத்துவதுடன் பலவீனமான பகுதிகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளையும் வழங்கும்படி உங்களது கணக்காய்வு நிறுவனத்திடம் கோரியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட டீ பெஷன் (தனியார்) கம்பனியின்** உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையிலுள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகளைச் சுட்டிக்காட்டக்கூடிய மூன்று (03) சமிஞ்ஞைகளை (signs) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட டீ பெஷன் (தனியார்) கம்பனியால்** நடைமுறைப்படுத்தக்கூடிய மூன்று (03) கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட டீ பெஷன் (தனியார்) கம்பனிக்கு** பரிந்துரைக்கக்கூடிய இரண்டு (02) தடுப்புக் கட்டுப்பாடுகளை (preventive controls) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட டீ பெஷன் (தனியார்) கம்பனியில்** நீங்கள் இனங்கண்ட இரண்டு (02) பிரதான வணிகச் செயன்முறைகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(e) **வரையறுக்கப்பட்ட டீ பெஷன் (தனியார்) கம்பனியிலுள்ள** GRN இன் துல்லியத்தன்மையை சரிபார்ப்பதற்கு பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) பிரயோகக் கட்டுப்பாடுகளை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

**Eran & Pep (E&P)** என்பது ஒரு பட்டயக் கணக்காளர் நிறுவனமாகும். இது கடந்த 3 ஆண்டுகளாக **Yes Finance PLC (YF)** இன் வெளிவாரிக் கணக்காய்வாளராக இருக்கிறது. இந்நிறுவனம் 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வுக்காக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளது. இதில் நீங்கள் ஈடுபடுத்தல் முகாமையாளராக இருப்பதுடன், ஈடுபடுத்தல் பங்காளர் 2022 ஆம் ஆண்டின் கணக்காய்வு தொடர்பான கீழ்வரும் புதிய நிகழ்நிலைப்படுத்தல்கள் (updates) பற்றி கலந்துரையாடியுள்ளார்:

(1) முகாமைத்துவ கடித விடயங்களை மேம்படுத்துவதற்கான கணக்காய்வாளரின் பரிந்துரைகளை வழங்குமாறு முகாமை கோரிக்கை விடுத்துள்ளது.

(2) இந்தக் கம்பனி பதிவு செய்யப்பட்ட ஒரு நிதிக் கம்பனியாக இருப்பதுடன், மீளாய்வு செய்யப்படும் ஆண்டில், வளர்ந்துவரும் வணிகமொன்றாக இருக்கும் அடகு பிடித்தல் சேவையை வழங்குவதற்காக தற்போதுள்ள தனது கிளைகளில் அடகு பிடித்தல் நிலையங்களைத் தொடங்கியிருந்தது.

(3) இலங்கை மத்திய வங்கியானது (CBSL) நிதிக் கம்பனிகளின் மூலதனத்தின் போதுமான தன்மை மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய குறிப்பிடத்தக்க அளவிலான புதிய வழிப்படுத்தல்களை விநியோகித்திருந்தது. மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு **YF** போராடி வருவதுடன், மோசமான மூலதன மட்டங்கள் **YF** இனை தொழில்துறையில் மிளிரும் ஒரு பெரிய நிறுவனத்துடன் ஒன்றிணைக்க CBSL ஐ வழிநடத்தும்.

(4) மற்றைய நிதி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், இந்தக் கம்பனி 2022 ஆம் ஆண்டில் எல்லை இலாபம் ஒன்றையே ஈட்டியுள்ளது.

(5) வலுவிழப்பு ஏற்பாடுகளில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய CBSL வழிப்படுத்தல்கள் காரணமாக இடைநிறுத்தல்கள் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டதால் இந்த ஆண்டு நிதிக் கம்பனிகளுக்கு ஒரு கடினமான ஆண்டாக விளங்கியது.

(6) சில சிரேஷ்ட முகாமையாளர்கள் கம்பனியிலிருந்து விலகியிருந்தனர் எனினும் அந்தப் பதவிகள் 6 மாதமாக நிரப்பப்படாமலேயே இருக்கின்றன.

(7) ஆண்டின் காலப்பகுதியில், தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றை இயக்குகின்ற **வரையறுக்கப்பட்ட சூரியா (தனியார்) கம்பனி** வைத்திருந்த பங்குகளில் 25% ஆனவற்றை **YF** கொள்வனவு செய்திருந்தது.

(8) 2022 ஆம் ஆண்டில் புதிய CEO நியமிக்கப்பட்டதுடன், அவருக்கான மிகையூதியக் கொடுப்பனவானது ஆண்டின்போது ஈட்டப்படும் வருமானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

திட்டமிடல் கூட்டத்தில், கணக்காய்வுக்குப் பொருத்தமான பொருண்மை ரூபா 23 மில்லியன் எனவும் அது மொத்தச் சொத்துக்களின் அடிப்படையிலானது எனவும் சிரேஷ்ட கணக்காய்வாளர் தெரிவித்துள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **YF** இல் கணக்காய்வு நடைமுறைகளை ஆற்றும்போது விசேட கவனம் செலுத்த வேண்டிய ஐந்து (05) பகுதிகளை (areas) **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(b) புதிய CEO உடனான கூட்டத்தில், நிதி அறிக்கையிடலிலுள்ள அனைத்து வழுக்களையும் மோசடிகளையும் இனங்காண வேண்டும் என்பதே கணக்காய்வாளரின் நோக்கம் என அவர் தெரிவித்திருந்தார்.

மேற்படி கூற்றை **மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(c) பொருத்தமான மட்டக்குறி ஒன்றின் அடிப்படையில் பொருண்மையின் உருவாக்கத்தை பாதிக்கக்கூடிய நான்கு (04) காரணிகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) கணக்காய்வாளர், நிறுவனத்தையும் அதன் சுற்றுச்சூழலையும் பற்றி புரிதலைப் பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டிய, மேற்படி விவரணத்தில் சுட்டிக்காட்டப்பட்ட ஐந்து (05) “தொழில்துறை மற்றும் ஒழுங்குபடுத்தல் காரணிகளை” **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(e) **YF** இன் தொடர்ந்தியங்கும் தன்மையை மீளாய்வு செய்யும்போது பிரயோகிக்கக்கூடிய ஆறு (06) கணக்காய்வு நடைமுறைகளைக் **குறிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |